# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்,
# திருவல்லிக்கேணி, சென்னை—5.
# வேலைவாய்ப்பு அறிவிப்பு
# ந.க. எண்.1000/2014 அ8 நாள் 02.12.2014.

வலைதளம்: www.sriparthasarathytemple.tnhrce.in

திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் கீழ்கண்ட பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடத்திற்கு இந்து சமயத்தினை சேர்ந்த தகுதி உள்ள நபர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10.01.2015

| வ. எண் | பதவியின் பெயர் | காலியிடம் எண்ணிக்கை | சம்பள விகிதம் |
|---|---|---|---|
| 1. | கூர்கா | 1 | **4100—10000 + 1400 P.B.7** |
| 2. | பரிச்சாரகம் | 1 | **4100—10000 + 1400 P.B.7** |
| 3. | நாதஸ்வரம் | 1 | **5200—15900 + 2000 P.B.9** |
| 4. | உதவி கைங்கர்யம் | 1 | **4100—10000 + 1400 P.B.7** |
| 5. | பலவேலை | 1 | **4100—10000 + 1300 P.B.7** |
| 6. | துப்புரவாளர் | 1 | **4100—10000 + 1400 P.B.7** |
| 7. | சலவை | 1 | **2800—8400 + 1200 P.B.5** |
| 8. | சன்னதி தீவட்டி | 1 | **2800—8400 + 1200 P.B.5** |

விண்ணப்பம் படிவம், விண்ணப்பம் செய்வதற்கான தகுதிகள் மற்றும் நிபந்தனைகளை ஆலய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் தெரிந்துக் கொள்ளலாம்

துணை ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)

# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை–5.

மின்னஞ்சல்: parthasarathy@tnhrce.org

வலைதளம்: www.sriparthasarathytemple.tnhrce.in

தொலைபேசி எண்:– 2844 2462

**பணியிடம் நியமனம் செய்ய விண்ணப்பம் வரவேற்பு**
**ந.க.எண். 1000/2014/அ8 நாள் 02.12.2014**

திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் கீழ்கண்ட பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடத்திற்கு இந்து சமயத்தினை சேர்ந்த தகுதி உள்ள நபர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10.01.2015

| வ. எண் | பதவியின் பெயர் | காலியிடம் எண்ணிக்கை | சம்பள விகிதம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | கூர்கா | 1 | 4100–10000 + 1400 P.B.7 | Minimum General Educational Qualification prescribed for the post of office Assistant in the Government Service as specified in rule 13 |
| 2. | பரிச்சாரகம் | 1 | 4100–10000 + 1400 P.B.7 | |
| 3. | நாதஸ்வரம் | 1 | 5200–15900 + 2000 P.B.9 | |
| 4. | உதவி கைங்கர்யம் | 1 | 4100–10000 + 1400 P.B.7 | |
| 5. | பலவேலை | 1 | 4100–10000 + 1300 P.B.7 | |
| 6. | துப்புரவாளர் | 1 | 4100–10000 + 1400 P.B.7 | |
| 7. | சலவை | 1 | 2800–8400 + 1200 P.B.5 | |
| 8. | சன்னதி தீவட்டி | 1 | 2800–8400 + 1200 P.B.5 | |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சேர்ந்தவாராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதுடன் உரிய சான்றிதழ்கள் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 56 மற்றும் 116(2) (xxiii)–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதி எண்.3,4,12 மற்றும் 13–ல் தெரிவித்த தகுதிகள் இல்லாதவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
4. துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை – 5 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
5. திருக்கோயிலின் ஆகம விதிகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவராகவும் இருக்க வேண்டும்.
6. தொழுநோய் மற்றும் அருவருக்கத்தக்க நோய் உள்ளவர்கள் அல்லது மனநிலை பற்றிய குறைப்பாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.
7. எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டனை பெற்றவராகவோ கடன் கொடுக்க சக்தியற்றவர் என நீதிமன்றத்தில் தீர்பளிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

8. அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பணிநீக்கம் செய்யப்பட்டவராகவோ திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவரோ இருக்க கூடாது.
9. விண்ணப்பிக்க தகுதி உள்ள நபர்கள் அறிவிப்பில் குறிப்பிட்ட மாதிரி படிவத்தின்படி கைப்பட எழுதியோ அல்லது தட்டச்சு செய்தோ சொந்த செலவில் அனுப்பி வைக்க வேண்டும்.
10. கல்வி தகுதி மற்றும் விண்ணப்பித்திற்கான சான்றுகள் அனைத்தும் ஜெராக்ஸ் காப்பி தகுதி வாய்ந்த அரசு பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிட்டு இணைத்து அனுப்ப வேண்டும். அசல் சான்றுகள் கண்டிப்பாக இணைக்கக் கூடாது.
11. விண்ணப்பங்கள் பதிவு தபாலில் அனுப்ப வேண்டும். நேரில் கொடுக்கும் விண்ணப்பங்கள் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும்.
12. விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அனுப்பும் கடைசி நாள் 10.01.2015 மாலை 5.45 மணி வரை குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் இவ்வறிவிப்பு நாளாகிய 04.12.2014 தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
13. விண்ணப்பம் செய்வோர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி விண்ணப்பிக்க வேண்டும். திருக்கோயில் நிர்வாகம் தேவை என கருதும் விவரங்களை விண்ணப்பதாரர் அளிக்க கடமைபட்டவராவார்.
14. தகுதி உள்ள நபரை தேர்வு செய்வதில் திருக்கோயில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.
15. தேர்வு செய்து நியமனம் செய்வது இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.
16. இந்த பணியானது முழு நேரம் பணியாகும்.
17. குறிப்பிட்ட தேதிக்குள் உரிய படிவத்தில் தேவையான இணைப்புகள் மற்றும் சான்றுடன் வரப்பெறாத விண்ணப்பங்கள் தகுதியற்றவை என நிராகரிக்கப்படும். தகுதியின்மையை கொண்டு விண்ணப்பங்கள் காரணம் கூறாது நிராகரிக்கப்படும்.
18. விண்ணப்பம் செய்ததாலேயே எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வு செய்யப்பட்டதாக கருதக் கூடாது.

இணைக்கப்பட வேண்டிய சான்றுகளின் சான்றிடப்பட்ட நகல்கள்

1. வயது
2. கல்வித் தகுதி
3. சாதி சான்றிதழ்
4. சிறப்புத் தகுதி சான்றிதழ்கள்
5. முன் அனுபவம் சான்றிதழ்கள் (ஏதேனும் இருப்பின்)
6. நன்னடத்தை சான்று

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டதும் பணியில் சேரும் முன் உடற்தகுதி சான்று அரசு பதிவு பெற்ற மருத்துவரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட நியமனங்கள் அனைத்தும் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய கொடைகள் சட்டம் 1959 (தமிழ்நாடு சட்டம் 22/1959) பிரிவு 55 மற்றும் அதனை ஒட்டி வெளியிடப்பட்ட பிரிவு 116(2) (xxiii)ல் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

துணை ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)